முருகப்பெருமான் துணை

**மகான் வியாக்ரமர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

09.11.2021, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அண்ணலே ஞான தேசிகா
மாறுதலை உலகினில் செய்யவே
மாதவசியாக வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ துலைதிங்கள்
வரமென மூவேழீர் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள், 09.11.2021 செவ்வாய்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதன்னை
3. தன்னிலே வியாக்ரமர் யானும்
தாமுரைப்பேன் உலக நலம்பெற
நன்னயமாய் மக்களை நோக்கி
ஞான உபதேசம் தந்தருளும்
4. அருளும் சன்மார்க்க வழிகளை
அனைவரும் ஏற்றுத் தொடர
அறமான தரும வழிகள் தன்னை
அனைவரும் கடைப்பிடித்து வர
5. வருகவே எங்கும் தருமபலம்
வளர்ந்து புண்ணிய பூமியாக
பேருலகம் மாற்றம் காண்கும்
பெருமைமிக்க பிரணவக் குடிலதனை
6. குடிலதனை அனுகி உலகோர்
குருவரங்கன் கரம்பட தீட்சை
நாடியே ஏற்று பின்தொடர
நாளும் செபதபம் காண
7. காணவே உலகமக்களுக்கு
கண்ணியமான வாழ்வு முறையும்
ஞானமாக ஆறுமுகப் பெருமான்
நல் அருளும் ஆசியும் கூடி
8. கூடியே உலகியல் செயல்பாடுகள்
குறைகள் இடர்கள் இல்லாதபடி
கூடிடும் ஞான ஆளுமையாக
குறையிலா வளர்ச்சி காணும்
9. காணவே ஞானவான்கள் தலைமை
கலியுகம் தானும் கண்டுயரவே
ஞான ஆட்சியாக மாறியே
ஞானசித்தர் ஆட்சிக் காலம் கனியும்

10. கனியவே தலைமை முன் முதல்
கருணைபட அரங்கன் அவதார
இனிமை கண்டு அருளிவர
இயம்பிடுவேன் கலியுக மக்கள்

11. மக்கள் அரங்க ஞானியரின்
மாதவ தரும பலத்துள் வர
ஆக்கமுடன் அற்புதம் நிகழும்
அனைவருக்கும் ஞானபலம் கூடும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–